**28.03.2026** **CC No. 721/2019** **DW1. ரமேஷ்**

கடந்த 02.03.2026-ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.06/2026 dated 24.03.2026ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 27.03.2026.**

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், குளச்சலில் உள்ள Hotelலில் பரோட்டா மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் Ex.P1 காசோலை எனது வங்கிக்கு உரியது என்றாலும், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது என்றாலும், சரிதான். ஆனால் பூர்த்தி செய்தது நான் இல்லை.

2. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு வழக்கறிவிப்பு வந்தது என்றால், சரிதான். இவ்வழக்கில் இறந்து போன புகார்தாரரின் பைனான்ஸ் நிறுவனத்தில் நான் நகை அடகு வைத்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால், இல்லை. அதனை இறந்து போன புகார்தாரர் வாங்கிக் கொண்டு நகை ஏலத்திற்கு சென்றதாக கூறினார்.

3. நான் நகை அடகு வைத்ததற்கான ஆவணத்தை (Ex.P5) புகார்தாரர் தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியுமா என்றால், எனக்கு அதைப் பற்றி தெரியாது. நான் 2017-2018 காலக்கட்டங்களில் ஏழு முறை புகார்தாரர் பைனான்ஸ் நிறுவனத்தில் நகையை அடகு வைத்துவிட்டு மூன்று முறை நகையை அடகு வைத்தாக முதல் விசாரணையில் தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல.

4. Ex.P5 ஆவணத்தில் உள்ள 7 இரசீதுகளிலும் எனது பெயர் மற்றும் புகைப்படம் உள்ளது என்றால், சரிதான். Ex.P5 ஆவணத்தில் உள்ள 7 ஆவணமும் வேவ்வெறு தேதிகளில் நகையை அடமானம் வைத்து வேவ்வெறு தேதிகளில் நகையை திருப்பியதாக உள்ளது என்றால், நான் மூன்று முறை தான் நகையை அடமானம் வைத்தேன். அந்த நகைகளை திருப்பவில்லை.

5. நான் புகார்தாரரின் நிறுவனத்தில் வைத்த அனைத்து நகைகளும் திருப்பப்பட்டு அந்த ஆவணங்கள் வட்டாச்சியரின் தணிக்கையின் பொழுது சமர்ப்பிக்கப்பட்டது என்றால், நான் நகைகளை மீட்டெடுக்கவில்லை.

6. நான் புகார்தாரர் நிறுவனத்தில் மொத்தமாக நகை அடகுவைத்த தொகை சேர்த்து 1 லட்சம் ரூபாய்க்கு கீழ் தான் என்றால், சரிதான். நான் புகார்தாரர் நிறுவனத்தில் நகையை அடகுவைத்ததற்கோ, அதனை ஏலம் விட்டதற்கோ அல்லது விற்பனை செய்ததற்கோ நிரூபணம் செய்வதற்கு ஆவணம் என்னிடம் இல்லை என்றால், சரிதான்.

7. பொதுவாக அடகு கடையில் நகை அடகு வைத்து மீட்கப்படவில்லை என்றால், நகை அடகு வைத்த இரசீது அடகு வைப்பவரிடம் தான் இருக்கும் என்றால், சரிதான். அதே போல் நகையை மீட்டெடுக்கும் பொழுது அடகு வைத்த இரசீதை திருப்பிக் கொடுத்துவிடுவார்கள் என்றால், சரிதான்.

8. நான் உண்மையில் நகையை மீட்டெடுத்த காரணத்தினால் தான் என்னிடம் அடகு இரசீதுகள் இல்லை என்றால், சரியல்ல. நான் நகையை மீட்டெடுக்கவில்லை. புகார்தாரர் நிறுவனத்தில் எவ்வளவு நாட்களுக்குள் நகையை மீட்டெடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், எனக்குத் தெரியாது.

9. 2018ம் வருடத்தில் நகையை அடகு வைத்து விட்டு அதற்கு அதிகமாக வட்டித் தொகை வந்ததால் அதற்கு பிணையாக என்னிடமிருந்து காசோலை வாங்கியதாக கூறுவதும், மேலும் அந்த நகையை ஏலத்தில் விட்டதாக கூறுவதும் இவ்வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால், சரியல்ல.

10. தங்க நகையை அடமானம் வைத்து விட்டு அந்த அடமான தொகைக்கு காசோலையையும் கொடுத்தது ஏற்புடையது அல்ல என்றால், சரியல்ல. புகார்தாரர் என்னிடமிருந்து நிரப்பப்படாத கையெழுத்திட்ட காசோலை கேரண்டிக்காக வாங்கினார். எனவே நம்பிக்கையின் அடிப்படையில் நான் காசோலையை கொடுத்தேன்.

11. புகார்தாரர் நிறுவனத்தினை தவிர நான் வேறு எங்கு நகைகளை அடமானம் வைத்துள்ளேன் என்றால், இதற்கு முன்னர் நான் புகார்தாரர் நிறுவனத்தினை தவிர வேறு எங்கும் நகை அடகு வைத்தது இல்லை. ஆனால் தற்சமயம் இந்த மாதம் முத்தூட் பைனான்ஸ்–லில் ஒரு தங்க மோதிரம் அடகு வைத்தேன்.

12. மேற்படி முத்தூட் பைனான்ஸ் நிறுவனத்தில் என்னிடம் நிரப்பப்படாத கையெழுத்திட்ட காசோலையை பிணையாக கேட்டார்களா என்றால், இல்லை. பொதுவாக எந்த நிதிநிறுவனத்திலும் தங்க நகையை அடகு வைக்கும் பொழுது எந்த காசோலையும் வாங்க மாட்டார்கள் என்றாலும், அது போல் இவ்வழக்கில் இறந்து போன புகார்தாரரும் என்னிடம் காசோலை வாங்கவில்லை என்றால், சரியல்ல. அவர் காசோலை வாங்கினார்.

13. புகார்தாரர் என்னிடம் அதிக வட்டி கேட்டார் என்றோ பிணையாக காசோலை கேட்டார் என்றோ எனது அனுமதியின்றி தங்க நகையை ஏலம் விட்டார் என்றோ அல்லது விற்பனை செய்து விட்டடார் என்றோ நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், இல்லை.

14. ஊர் நிர்வாகத்திடம் புகார்தாரர் மீது புகார் கொடுத்தேன் என்றால், சரிதான். நான் அப்பொழுது யார் ஊர்த்தலைவராக இருந்தார் என்றால், பிரபாகரன் என்பவர் இருந்தார். அவரிடம் தான் நான் புகார் கொடுத்தேன். ஊர்த்தலைவர் அவரை விசாரித்தாரா என்றால், விசாரித்தார்.

15. அப்போதைய ஊர்த்தலைவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யலாம் என்றால், தற்சமயம் அவர் சாட்சியாக வருவாரா என்று தெரியவில்லை. மேற்படி புகார் சம்மந்தமாக ஊர் நிருவாகத்தில் விசாரணை செய்த ஆவணங்கள் ஊர் நிருவாகத்தில் இருக்கும் என்றாலும், அதனை நீதிமன்றத்திற்கு வரவைக்கலாமா என்றால், நான் வாய்மொழியாக புகார் கொடுத்ததால், ஆவணங்கள் எதுவும் இல்லை.

16. நான் புகார் கொடுத்ததாக சொல்வது உண்மை இல்லை என்றாலும், அதற்காக தான் ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியவில்லை என்றாலும், சரியல்ல. நான் நகையை அடமானம் வைத்ததற்கும் இவ்வழக்கு தொகைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், நான் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நகை அடமானம் வைத்ததை கூறி தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

17. இவ்வழக்கை எனக்கு நடத்துவதற்கு நான் தான் வழக்கறிஞரிடம் தகவல்களை கொடுத்தேன் என்றால், சரிதான். அடமானம் வைத்த நகையை வெளியே விற்பனை செய்து கடனை அடைக்க வேண்டி நான் புகார்தாரரிடம் நகைகள் கேட்டதால் புகார்தாரர்

என்னிடமிருந்து காசோலையை பெற்று நகையை விற்பனை செய்தார் என நான் கூறியிருந்தால் அது தவறு என்றால், நான் அவ்வாறு கூறவில்லை.

18. நானும் புகார்தாரரும் சேர்ந்து இரணியலில் ஒரு நகைக்கடையில் எனது தங்க நகைகளை கொண்டு சென்று விற்பனை செய்தோம் என்றும் அப்பொழுது நகைக்கடன் போக அதிகமாக 7 ஆயிரத்து 600 ரூபாய் வந்ததால் புகார்தாரர் என்னிடம் அந்த 7600 ரூபாயை கொடுத்து விட்டு காசோலையை பெற்றுக் கொள்ளுமாறு கூறினார் என்று நான் கூறியிருந்தால், அது தவறு.

19. தங்க நகைக்கடன் சம்மந்தமாக எந்த காலக்கட்டங்களிலும் எனக்கும் புகார்தாரருக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்பதால் தான் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தங்க நகை சம்மந்தமாக பரிவர்த்தனைகள் 2017–2018 காலக்கட்டங்களில் இருந்தது என்றாலும், ஆனால் இவ்வழக்கு தொகையானது 15.07.2019 அன்று நடைபெற்றது என்றால், சரியல்ல. இது நகைக்கு சம்மந்தப்பட்டது தான்.

20. புகார்தாரரின் வீட்டிற்கு நான் வசித்து வரும் நபர் என்பதாலும் ஏற்கனவே அவரிடம் நகையை அடகு வைத்து நல்ல பழக்கம் இருந்து வந்ததால் புகார்தாரர் 15.07.2019ம் தேதியன்று எனக்கு 1 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தார் என்றாலும், அதனை திரும்பக் கொடுக்க வேண்டி நான் இவ்வழக்கு காசோலையை கொடுத்து விட்டு தற்சமயம் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

21. இவ்வழக்கு காசோலை தொகையை நான் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால், சரியல்ல. நான் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>**மறுவிசாரணை:**</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.